***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.164/2021 – P.W.1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | பூப்பாண்டியன் |
| *Father/Husband's Name* | வைரசுந்தரம் |
| *Village* | வேலங்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *38* |

***A1, A3*** **எதிரி ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார். A2 ஆஜர். A4 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 30.03.2023.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வடபாதிமங்கலத்தில் கனகம் என்ற பெயரில் மெடிக்கல் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன். நான் B.A., History படித்துள்ளேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 08.10.2020ம் தேதியன்று ,ரவு 09.15 மணிபோல நான் என் மனைவியும் மெடிக்கல் ஷாப்பை பூட்டிவிட்டு எங்களுடைய இருச்சக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்றோம். பண்ணைக்குட்டை அருகில் சென்றபோது பின்னாலிருந்து இரண்டு பைக் வந்தது. இரண்டு பைக்குகளிலும் இரண்டு இரண்டு நபர்கள் என்று நான்கு நபர்கள் வந்தார்கள். வழிப்பறி வழிப்பறி என்று அந்த நபர்கள் கத்திக்கொண்டே வந்து எங்கள் பைக்கை எட்டி உதைத்தார்கள். நான் கீழே விழுந்து எழுந்தபோது கட்டையால் ஒரு நபர் என் தலையின் முன்பக்கத்தில் தாக்கினார். எனக்கு பொறித்தட்டியதுபோல ஆனது. என் மனைவி யாரையும் ஒன்றும் செய்துவிடாதே என்று சொல்லி அவரது கழுத்திலிருந்த கழட்டி கொடுத்தார். அந்த செயின் சுமார் 1.1/2 - 2 பவுன் இருக்கும். எதிர்திசையில் இரு நபர்கள் வருவதை பார்த்தவுடன் வண்டி வருகிறது என்று கூறி அந்த 4 நபர்களும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். வண்டி எண்ணை பார்க்கலாம் என்று நினைத்தபோது பைக்கில் வண்டி எண். இல்லை. என் மனைவி இந்த சம்பவத்தின்போது எங்களுடைய பாதுகாப்பிற்காக நான் என் பாக்கெட்டில் வைத்திருந்த பெப்பர் ஸ்பிரேயை எடுத்து எதிரிகள் என்னை தாக்கியவுடனே அடித்தார். இந்த சம்பவம் ஓரிரண்டு நிமிடங்களுக்குள் நடந்தது போல் இருந்தது. அவர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள். நான் திருவாரூர் அரசு மருததுவமனைக்கு சிகிச்சைக்கு போய் சேர்ந்தேன்.

3. மறுநாள் காலையில் வடபாதிமங்கலம் காவல்நிலையம் சென்று இதுக்குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்தேன். மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நான் சிகிச்சையில்

இருக்கும்போது மருத்துவரும் என்னை விசாரித்தார். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். (**இந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. போலிசார் இது சம்மந்தமாக விசாரித்தார்கள். ஒருநாள் செயின் கிடைத்ததாகவும் சொன்னார்கள். காவல்நிலையம் வரச்சொன்னார்கள். நானும் போய் பார்த்தேன். என்னுடைய செயினை அடையாளம் காட்டினேன். நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய செயினை திரும்ப பெற்றுக்கொண்டேன். அந்த செயினை இன்று விசாரணைக்காக கொண்டு வந்துள்ளேன். (**சுமார் 15.880 எடையுள்ள பட்டைச்செயின் ஒன்று அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5. போலிசார் விசாரணையில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மாங்குடியை சேர்ந்தவர்கள் என்று கூறினார்கள் பெயர் எனக்கு நினைவில் இல்லை. அந்த சம்பவத்தில் ஈடுப்பட்டவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் - இருட்டு நேரமாக இருந்தது. நான் விழுந்து எழுவதற்குள் அவர்கள் போய்விட்டார்கள். அதனால் என்னால் சரியாக அவர்களை அடையாளம் காட்ட இயலவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில்</u> <u>குறுக்கு விசாரணை</u>

1. நடந்ததாக ெ சால்லக்கூடிய சம்பவத்தில் ஈடுபட்டதாக சொலலப்படும் இரண்டு இருச்சக்கர வாகனங்களின் வகையங்கள் குறித்து போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் - சரிதான். இருட்டாக இருந்தாலும் நபர்களின் தேக உருவ அமைப்பு குறித்து சொல்லமுடியும் என்றால் - சரிதான். ஆனால் அந்த வகையிலும் நான் சொல்லவில்லை என்றால் - சரிதான்.

2. நான் முழுமையான சிகிச்சை பெறாமல் மருத்துவமனையிலிருந்து வெளியேறி விட்டேன் என்றால் - சரிதான். செயினை கழட்டுவதற்கும் அறுப்பதற்கும் உள்ள வித்தியாசம் தெரியும் என்றால் - தெரியும்.

3. இந்த வழக்கின் புகார் என்னால் கொடுக்கப்பட்டது என்றும் அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் - சரிதான். போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் - 10 முறைக்கு மேல் விசாரித்தார்கள். செயினை என் மனைவி கழட்டி கொடுத்தார் என்ற விவரத்தினை போலிசார் என்னை விசாரித்போது சொல்லியிருக்கிறேனா என்றால் - சொல்லியிருக்கிறேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் - சரியல்ல.

4. என்னை முதன்முதலில் எப்போது போலிசார் விசாரித்தார்கள் என்றால் - நடந்ததாக சொல்லப்படும் சம்பவ தினத்தன்று இரவு 10.00 - 10.30 மணிக்கும் திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் விசாரித்தார்கள். அப்போதே நான் புகாரை கொடுத்துவிட்டேன் ஏ்னறால் - சரிதான். மறுநாள் காலையில் 08.00 மணிக்கு போய் வடபாதிமங்கலம் காவல்நிலையத்திற்கு சென்று ஒரு புகார் கொடுத்தேன்.

5. அதன்பின்னர் என் மனைவியை விசாரித்து அவரிடமும் ஒரு புகார் வாங்கிக்கொண்டார்கள் என்றால் - சரிதான். நான் எனது பெயரில் மெடிக்கல் ஷாப் வைத்திருக்கவில்லை என்றால் -சரிதான் அதற்கான அரசால் வழங்கப்பட்ட அனுமதியும் என்னிடம் இல்லை என்றால் -சரிதான். என் மனைவி பெயரில் லைசென்ஸ் உள்ளது.

6. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஒரு வழக்கு சம்பவம் இல்லை என்றால் - சரியல்ல. சொன்ன வகையில் என்னால் ஒரு புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் - சரியல்ல.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.164/2021 – P.W.2 (LW2 )***

| | |
|---|---|
| *Name* | நித்யா |
| *Father/Husband's Name* | பூப்பாண்டியன் |
| *Village* | வேலங்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *32* |

***A1, A3*** **எதிரி ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார். A2 ஆஜர். A4 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 30.03.2023.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வடபாதிமங்கலத்தில் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன். அ.சா.1 பூப்பாண்டியன் எனது கணவர். 08.10.2020ம் தேதியன்று 09.15-09.30 மணியிருக்கும் கடையை பூட்டிவிட்டு நானும் எனது கணவரும் இருச்சக்கர வாகனத்தில் புனவாசல் இறக்கத்தில் சென்றுக்கொண்டிருந்தோம். திடீரென்று எங்கள் வண்டியை யாரோ உதைத்தது போல் இருந்தது. இரண்டு இருச்சக்கர வாகனங்களில் 4 நபர்கள் வந்திருந்தார்கள். வழிப்பறி, வழிப்பறி என்று சொன்னார்கள். நான் பயந்துக்கொண்டு என் கழுத்திலிருந்த செயினை கழட்டி கொடுத்தேன். மேலே கையை வைக்காதீர்கள் என்றும் நான சொன்னேன். நான் என்னுடைய தாலிச்செயினையும் கழட்டிக்கொடுப்பேன் என்று அவர்கள் எதிர்பார்த்தாரகள். நான் என்னுடைய கணவர் பாக்கெட்டிலிருந்து எங்களுடைய பாதுகாப்பிற்காக வைத்திருந்த பெபபர் ஸ்பிரேயை எடுத்து அவர்கள் முகத்தில் அடித்தேன். என் கணவரை கட்டையால் அந்த 4 நபர்களில் ஒருவர் அடித்தார். என் கணவருக்கு வலது பக்க முன்தலையில் காயம் ஏற்பட்டது. எதிர்திசையில் ஒரு வண்டி வந்தது. அதனை பார்த்தவுடன் அந்த 4 நபர்களும் போய்விட்டார்கள்.

2. காயம்பட்ட என்னுடைய கணவரை திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்தேன். போலிசாரின் விசாரணையில் எங்களுடைய செயின் கிடைத்ததாக சொன்னார்கஅ.சா.பொ.1 என்னுடைய செயின்தான். அந்த செயின்தான் அந் நால்வரிடமும் நான் கழட்டிக்கொடுத்தது.

3. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

4. எதிரிகளை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் - எங்களுக்கு நடந்த அந்த சம்பவம் ஒரு சில வினாடிகள் தான் நடந்தது. அதனால் என்னால் அடையாளம் காட்ட இயலாது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. மெடிக்கல் ஷாப்பில் மருத்துவர் வந்து பிராக்டிஸ் செய்து வருகிறார என்றால் - சரிதான். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் மருத்துவரை பார்க்க வரும் நோயாளிகளுக்கு டோக்கன் வழங்கும் வேலை நான் பார்த்து வருகிறேன் என்றால் - சரிதான்.

2. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு 1 வாரத்திற்கு முன்பாக சோழாச்சி என்ற கிராமத்தினை சேர்ந்த மாணிக்கம் எங்கள் மெடிக்கல் ஷாப்பிற்கு வந்து பிராக்டிஸ் செய்யும் மருத்துவரிடம் சிகிச்சைக்காக வந்தபோது ஒரு பிரச்சினை ஏற்பட்டு என் கணவர் வடபாதிமங்கலம் காவல்நிலையத்தில ஒரு புகார் கொடுத்தார் என்றால் - சரிதான். என் கணவரால் கொடுக்கப்பட்ட புகாருக்கு என்னவிதமான தீர்வு எடுக்கப்பட்டது என்ற விவரம் இன்றுவரை எனக்கு தெரியாது என்றால் -சரிதான்.

3. நடந்ததாக சொல்லப்படும் குற்ற செயலில் யார் ஈடுபட்டார்கள் என்ற விவரம் தற்போது வரை எனக்கு தெரியாது என்றால் - சரிதான்.

4. முதல் விசாரணையில் நான் சொன்ன வகையில் ஒரு நிகழ்வு இல்லை என்றால் - சரியல்ல. என் கணவரால் நாங்கள் இருக்கக்கூடிய மெடிக்கல் ஷாப்பில் நடைப்பெற்ற பிரச்சினை தொடர்பான புகாரின் அடிப்படையில் பின் யோசனையிட்டு இந்த வழக்கில் சொல்லப்பட்டவகையில் ஒரு வழக்கு உருவாக்கப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் முதல் விசாரணையில் தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் - சரியல்ல.